செய்தி வெளியீடு எண்: 497 நாள் :17.09.2013

<u>செய்தி வெளியீடு</u>

சவுதி அரேபிய நாட்டில், தனியார் மீன்பிடி நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடி தொழிலாளர்களாக பணிபுரிந்து வந்த ராமநாதபுரம் மாவட்டம், காரங்காடு, முள்ளிமுனை, மோர்ப்பனை, திருப்பாலைக்குடி மற்றும் ரோச்மாநகர் மீனவ கிராமங்களைச் சேர்ந்த பத்து மீனவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம் பழையார் கிராமத்தினை சேர்ந்த ஒரு மீனவர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் ஆரோக்கியபுரம் மீனவ கிராமங்களைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் என மொத்தம் 16 தமிழக மீனவர்கள், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சவுதி அரேபியா நாட்டிலிருந்து தனியார் மீன்பிடி கப்பலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, தவறுதலாக ஈரான் நாட்டு கடல் எல்லைப்பகுதிக்குள் சென்றதன் காரணமாக, அந்நாட்டு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனை விசாரித்த ஈரான் நாட்டு நீதிமன்றம், கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஒவ்வொருவரும் 5,750 அமெரிக்க டாலரை அபராதமாக செலுத்த வேண்டும் என்றும், அபராதத் தொகையுடன் 6 மாத கால சிறைத்தண்டனையையும் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

இதனை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு 27.7.2013 அன்று ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில், ஈரான் நீதிமன்றம் விதித்த இரண்டு தண்டனைகளில், ஆறு மாத கால சிறை தண்டனையை தமிழக மீனவர்கள் அனுபவித்து விட்டார்கள் என்றும், வறுமை நிலை காரணமாக அபராதத் தொகையை கட்ட இயலாததால் ஈரான் நாட்டு அரசாங்கம் அவர்களை சிறையிலிருந்து விடுவிக்கவில்லை என்றும் தெரிவித்து, ஈரான் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் எவ்விதமான சட்ட உதவிகளையும் தமிழக மீனவர்களுக்கு அளிக்கவில்லை என்பதையும், மீனவர்களை விடுவிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி, ஈரான் நாட்டு சிறையிலிருக்கும் தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இது மட்டுமின்றி, ஈரான் நாட்டு சிறையில் அடைபட்டிருந்த 16 தமிழக மீனவர்களின் குடும்பங்களின் வறிய நிலையினை கருணையுடன் பரிசீலித்து, அவர்களது குடும்பத்தினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகை வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சர்களுடன் பாதிக்கப்பட்ட 16 மீனவக் குடும்பங்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று நிவாரணத் தொகையை வழங்கி, ஆறுதல் கூறியதோடு, 16 மீனவர்களையும் விடுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளையும் அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் பயனாக, 16 தமிழக மீனவர்களும் ஈரான் நாட்டு சிறையிலிருந்து 16.9.2013 அன்று விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட 16 மீனவர்களும் விமானம் மூலமாக 17.9.2013 அன்று நண்பகல் 12 மணிக்கு மும்பை விமான நிலையம் வந்தடைகின்றனர். இந்த 16 தமிழக மீனவர்களையும் மும்பை விமான நிலையம் சென்று வரவேற்குமாறு மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சருக்கு உத்தரவிட்டதோடு, அவர்களை தங்களது சொந்த கிராமங்களுக்கு தமிழ்நாடு அரசின் செலவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்:- 17.9.2013